*16*

## குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# குடும்பத்திலுள்ள சமாதானம்

## [கலாத்தியர் 5:22, 23]

பரிசுத்த ஆவியின் கனியின் மூன்றாவது பண்பு சமாதானம் ஆகும். சமாதானத்தின் தேவையை நாம் நன்றாகவே அறிந்திருக்கிறோம், ஏனென்றால் போரினுடைய யதார்த்த தன்மையை நாம் அறிந்திருக்கிறோம்: மத்திய கிழக்கு பகுதியில் போர், மக்கள் மற்றும் மலைவாசிகளிடம் உள்ள போர், கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா, வியட்நாம் மற்றும் கொரியா இடையே நடந்த முந்திய போர்கள், உலகப்போர்கள். உண்மையில், மனித வரலாற்றில் அநேகமாக பெரும்பாலான காலங்கள் சமாதானத்தோடு வாழ்வதிலும் அதிகமாக போரிலே வாழ்ந்திருக்கிறார்கள். மனித குலத்தின் இயல்பான சூழ்நிலை என்பது “போரையும் மற்றும் போரைப் பற்றின வதந்திகளைக்” கேட்பதுமாய் இருக்கிறது (மத்தேயு 24:6). உலக முழுவதும், சமாதானத்துக்காகவும் அதற்காக ஜெபிக்கவும் செய்கிறோம்.

அநேகமாக அதிக அர்த்தமுள்ளதாக்கும் நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் உண்மையில் அடிக்கடி சமாதானமற்ற சூழ்நிலைகளே காணப்படுகிறது. அரசியல் போர்க்களம் - வார்த்தை மற்றும் சிந்தனையின் போர் - இவைகள் சர்வதேச மற்றும் உள்ளூர் மட்டத்தில் நடக்கின்றன. நாம் நம்முடைய வேலை ஸ்தலத்தில் ஒற்றுமையின்மையை அநுபவிப்பட்டதுண்டு. இனங்கள் பல்வேறு காரணத்தால் பிரிந்திருப்பதுண்டு. சிலசமயங்களில் சபைகளிலும் பிரிவுகள் ஏற்படுவதுண்டு. குடும்பத்திலும்கூட சண்டைகள் உண்டாவது உண்டு.

நாம் அதிசயப்படும் வண்ணமாக பல சச்சரவுகளை நாம் அனுபவப்பட்டிருக்கலாம், ‘‘நமக்குள் எப்படி சமாதானம் உண்டாகும்?’’ என்று எண்ணக்கூடும். *சமாதானம் என்பது தேவனுடைய வல்லமையின் ஒரு பொருள் ஆகும்.* நாம் வெற்றிகரமான குடும்பத்தை எப்படி கொண்டிருப்பது என்பதில் ஆர்வமுள்ளவர்களாய் இருந்து குடும்பத்தில் சமாதானத்திற்கு ஆதாரமூலமாக இருப்பவர் தேவனே என்பதை அறிந்துணர்தல் அவசியமானதாக இருக்கிறது.

சமாதானம் என்பது புதிய ஏற்பாட்டின் தலைப்பில் முழுவதும் ஊடுருவி நிற்பதாகும்:

- தேவனே சமாதானத்தை தருகிறவர் இதை அப்போஸ்தலர்களால் புரிந்து கொள்ள முடிந்தது. அவர்கள் தேவனை நோக்கி தங்கள் வார்த்தைகளை கேட்கிறவர்கள் மற்றும் வாசிப்பவர்களின் சமாதானத்திற்காக ஜெபித்தனர். “நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும்

*உண்டாவதாக" என்று சொல்லி வாழ்த்தினர் (ரோமர் 1:3).*[1]

- *தேவன் "சமாதானத்தின் தேவனாக" இருக்கிறார் (ரோமர் 15:33; பிலிப்பியர் 4:9; 1 தெசலோனிக்கேயர் 5:23; எபிரெயர் 13:20; பார்க்க 2 தெசலோனிக்கேயர் 3:16).*
- *இயேசு வந்த போது, சமாதானத்தின் செய்தியை பரைசாற்றுகிறவராக வந்தார் (லூக்கா 2:14).*
- *இயேசு சமாதானத்தை தருகிறார் (யோவான் 14:27; 16:33).*
- *இயேசுவே நம்முடைய சமாதானமாக இருக்கிறார் (எபேசியர் 2:14).*
- *சமாதானம் என்பது பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் செய்யும் பங்காகும் (கலாத்தியர் 5:22).*

இந்த வரிசையான உண்மைகளில் சமாதானத்தைப் பற்றி வேதாகமம் போதிக்கும் ஒரு உண்மை என்னவென்றால், இந்த சமாதானம் தேவனிடத்திலிருந்து வருகிறது. இந்த காரியத்தை நாம் பல வகையில் வெளிப்படுத்தலாம்: "சமாதானம் கிறிஸ்துவினிடத்திலிருந்து வருகிறது"; "சமாதானம் பரிசுத்த ஆவியினிடத்திலிருந்து வருகிறது"; "இரட்சிப்பு அடைவதில் சமாதானம் வருகிறது." இந்த சத்தியத்தை நாம் எவ்விதமாகக் கூறினாலும், நம்முடைய பெலத்தினால் சமாதானம் வராது அல்லது நம்முடைய சொந்த ஞானத்தினாலும் வராது. எந்த இடமாக இருந்தாலும், எந்த வேளையாக இருந்தாலும் - இந்த நம்முடைய உலகத்தில், நம்முடைய இந்த வாழ்க்கையில், மற்றும் *நம்முடைய இந்த குடும்பத்தில் தேவன் ஒருவரே உண்மையான சமாதானத்தின் தோற்றமாயிருக்கிறார்.*

ஒரு கேள்வி எழும்புகிறது: எப்படி தேவன் குடும்பத்திற்கு சமாதானம் கொடுக்கிறார்? இவற்றை மூன்று வழிகளில் தேவன் செய்கிறார்.

## ஒரு மனிதன் மற்றும் தேவனுக்கிடையில் உள்ள சமாதானம்

*முதலாவது, தேவன் அவருக்கும் மனிதனுக்கும் இடையில் சமாதானம் தருகிறார்.* ரோமர் 5:1, "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" என்று கூறுகிறது. இந்த வசனம் முன்னதாகவே நாம் தேவனிடத்திலிருந்து வேற்றுமைப் பட்டிருக்கிறோம் என்கிறது. நாம் பாவம் செய்யும் போது, நாம் தேவனுக்கு பகைவராகிறோம், அவருடைய கோபத்திற்கு பாத்திரராகிறோம். இருந்தபோதும், இயேசு கிறிஸ்துவின் பலியின் மூலமாகவும், கிறிஸ்துவுக்கு நம்முடைய பிரதியுத்தரத்தின் மூலமாகவும், தேவன் தமக்கும் நமக்கும் இடையில் சமாதானத்தை அருளியிருக்கிறார். நாம் விசுவாசத்திலும் கீழ்ப்படிவதிலும் பதிற்செய்யும் போது, நமக்கும் தேவனுக்கும் எந்த ஒரு பகை இல்லை, ஆனால் அவரோடு சமாதானமாயிருப்போம்.

எப்படி நாம் தேவனோடு சமாதானமாய் இருப்பது நம்முடைய குடும்பத்தில் மாற்றம் ஏற்படுத்துகிறது? நமக்கு சந்தோஷமான குடும்பம் வேண்டுமானால், முதலாவது நாம் கிறிஸ்தவர்களாக மாற வேண்டும் - மற்றும் கிறிஸ்தவர்கள்

போல் நடந்து கொள்ள வேண்டும்! பிற்பாடு மற்றவர்களோடு சமாதானம் தொடரும். 1 யோவான் 1:7ல் நாம் "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" என்று வாசிக்கிறோம் கிறிஸ்தவர்களிடத்தில் பேசும் இந்த வசனம் இரண்டு முடிவுகளையும் மற்றும் ஒரு தேவையையும் உள்ளடக்கியது ஆகும். இந்த தேவையானது வெளிச்சத்தில் நடப்பதாகும், அல்லது தேவனுடைய சித்தத்தை நம்மால் முடிந்த அளவுக்கு செய்வதாகும். முதல் முடிவு என்பது மன்னித்தலாகும்; இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். மற்ற முடிவு என்பது ஒருவரோடொருவர் ஐக்கியப்படுவதாகும். நம்முடைய பெரிதான தேவை என்பது சரியான முறையில் தேவனோடு உறவு வைத்துக் கொள்ளுதலாகும். நாம் பாவத்திலிருந்து கழுவப்பட்டிருக்கும் போது - நாமும் மனிதர்களோடு சரியான உறவை வைத்துக் கொள்ள முடியும். நாம் எல்லாரும் ஐக்கியத்தோடு ஒருவரோடொருவர் குடும்பத்திலும் அதுபோல மற்ற உறவுகளோடும் ஐக்கியப்பட்டிருப்போம்.

## மனிதனுக்குள்ளாகவே சமாதானம்

தேவன் நம் ஒவ்வொருவருக்குள்ளாகவே சமாதானத்தை தந்திருக்கிறார். நாம் - *தேவன் தமக்கும் மனிதனுக்கும் இடையில் சமாதானம் அளிக்கிறார் என்று கூறமுடியும்.* நாம் எல்லாரும் நமக்குள்ளாகவே உள்நாட்டு போரை நடத்துகிறோம்; நம்முடைய ஒரு பகுதி ஒரு காரியத்தை தேடுகிறது; மற்றொன்று வேறொன்றைத் தேடுகிறது. நம்மைக் கிழித்துப்போடுவதாக பயமுறுத்தும் உள்ளான கலவரங்களிலிருந்து தேவன் நமக்கு சமாதானம் தரக்கூடியவராய் இருக்கிறார். நம்மை பிரிக்கக் கூடிய உள்நாட்டு பிரிவினைகளை சரிசெய்து தருகிறார்.

நமக்குள்ளாக சமாதானம் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. இயேசு தமது சீஷர்களுக்கு சமாதானத்தை தருவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குச் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27; 16:33 ஐயும் பார்க்கவும்) என்று அவர் சொன்னார். இவ்வாறு பவுல் எழுதினார்,

> நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும் (பிலிப்பியர் 4:6, 7).

சந்தோஷமான குடும்பத்திற்கு தேவனோடு சமாதானம் என்பது முதலாவது அவசியமாயிருக்கிறது; நமக்குள்ளாக சமாதானம் என்பது இரண்டாவது. அடிக்கடி, நம்முடைய குடும்பத்திலுள்ள பிரச்சனை சச்சரவுகளாய் பிரிந்து

செல்வது என்பது உறவுகளில் பிரச்சனை அல்ல, ஆனால் தனிப்பட்ட பிரச்சனை ஆகும். ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினர் தங்களுக்கு உள்ளான பிரிவினைகளால் பிளவு ஏற்படலாம், தாழ்வுமனப்பான்மையின் உணர்வுகளால் அல்லது குற்றவுணர்வு, அல்லது பற்றாக்குறை, சுயசந்தேகம் அல்லது சுய வெறுப்பு, தொடர்ச்சியான தோல்விகளினால் மற்றும் ஏமாற்றத்தினால் ஏற்படலாம். இந்த ஏமாற்றத்தை குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரிடமும் காண்பிக்கின்றனர், இது போன்றே மக்கள் தங்கள் முதலாளியிடமுள்ள கோபத்தினால் சிலர் தங்கள் கோபத்தை தங்கள் நாயை ஊதைத்து வெளிப்படுத்துகின்றனர்.

"எல்லாப்புத்திக்கும் மேலான தேவனுடைய சமாதானம்" (KJV) எப்படி இப்படிப்பட்ட தனிப்பட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உதவுகிறது? கிறிஸ்தவர்களிடம் இருக்கும் சமாதானம் எல்லா விதமான முரண்பாடுகளையும் தவிர்க்கும் என்றும் அவர்கள் எந்த சூழ்நிலையிலும் வருத்தமடையவோ துயரம் அடையவோ மாட்டார்கள் என்று உறுதிபட கூறமுடியாது. இருப்பினும், கவிழ்ந்து விடாமல் வாழ்க்கையின் புயலை சமாளிக்க ஒரு நங்கூரத்தை அளிக்கிறது. இந்த சமாதானம், வாழ்க்கையில் நாம் எதிர் கொள்ளும் நம்முடைய பிரச்சனைகளால் மற்றவர்கள் துன்பப்படாமல் இருக்கும்படி நாம் தாங்கிக் கொள்ள உதவுகிறது.

எப்படி "தேவனுடைய சமாதானம்" நம்முடைய உள்ளிருக்கும் முரண்பாட்டை தீர்ப்பதற்கு உதவுகிறது? *எல்லாவிதமான தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் தேவனிடத்தில் பதிலுண்டு!* சில உதாரணங்கள் இங்கே.

*குற்றுணர்வு.* நமக்குள் பல சமயங்களில் மனம் குழப்பத்தையும் வெறுப்புணர்ச்சியும் அடைந்து, மன அமைதி கெடுவது ஏன்? பலசமயங்களில் நம்முடைய *குற்றவுணர்ச்சியினால். இந்த குற்ற உணர்ச்சிக்கு தேவனிடத்தில் பதில் உண்டு:* அது மன்னிப்பு! அவருடைய வழிகாட்டுதலின்படி நம்முடைய வழியை மாற்றினோமானால், அவர் நமக்கு மன்னிப்பளிப்பார், பின்பு நாம் குற்றஉணர்ச்சியின் பாரத்தை சுமக்க வேண்டியதில்லை.

*அன்பில்லாத உணர்வு.* சிலருக்கு, பிரச்சனை அன்பில்லாத உணர்வாகும். *இந்த அன்பில்லாத உணர்வுக்கு தேவனிடத்தில் பதில் உண்டு* - அதாவது, அவர் நம்மிடத்தில் அன்புகூருகிறார் (யோவான் *3:16*)! நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு அவர் நம்மிடத்தில் அன்புகூருகிறார். மற்றவர்கள் நம்மிடத்தில் அன்புகூருகிறார்களோ இல்லையோ தேவன்அன்புகூருகிறார்!

*தாழ்மை உணர்ச்சி.* மற்றொரு பொதுவான பிரச்சனை என்னவென்றால் *தாழ்மையுணர்ச்சி அல்லது அற்பமாக எண்ணுதல். இந்த தாழ்மையுணர்ச்சிக்கு தேவனிடத்தில் பதில் உண்டு.* உண்மையில், அவரிடம் இரண்டு பதில்கள் உண்டு. முதலாவது, தேவன் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைப்பது நாம் அவர் பார்வையில் அற்பமானவர்களல்ல; நாம் விலைமதிப்பற்றவர்கள். ஏனென்றால் அவர் நமக்காக தம்முடைய ஒரே குமாரனை மரிக்க கொடுத்திருக்கிறார் (ரோமர் *5:8*). இரண்டாவது, நாம் என்ன செய்ய வேண்டுமென நினைக்கிறோமோ அவை எல்லாவற்றையும் அவருடைய உதவியோடு செய்ய முடியும் (பிலிப்பியர் *4:13*; எபேசியர் *3:20, 21*).

*தோல்வி.* சிலர் *தொடர்ச்சியான தோல்வியினால்* ஒடுக்கப்பட்டிருக்கிறோம். நாம் எவைகளை நிறைவேற்றவேண்டும் என்று முயற்சித்தோமோ அதினால் நாம் வெறுப்புணர்ச்சி அடைகிறோம். ஒருவேளை நம்முடைய எல்லா

வாழ்க்கைபகுதியிலும் நாம் தொடர் வீழ்ச்சியை அடைந்தவர்களாக அனுபவப்படுகிறோம். *வாழ்க்கையின் ஏமாற்றங்களுக்கு தேவனிடத்தில் பதில் உண்டு.* அவர் ஒரு சரியான தீர்வை வழங்குகிறார் - நித்தியத்தை மையமாக கொண்ட, இங்கு இருக்கிறதான எல்லாவித வீழ்ச்சிகளும் சில மாற்றத்தையே ஏற்படுத்துகின்றன - என்றே அது காட்டுகின்றது. உண்மையாகவே மாற்றத்தை ஏற்படுத்துவது என்னவென்றால் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்கு செல்வதுதான். நம்முடைய இந்த வாழ்க்கையில் அநேக தோல்விகளை நாம் சந்திருந்தாலும் நமக்கு இரட்சிப்பின் உத்திரவாதம் உண்டு.

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் மிகுந்த துயரமுற்றவர்களாக உணரும் போது அல்லது மற்றவர்களுடைய வாழ்க்கையை துயரமுற்றதாக ஆக்க சோதிக்கப்படும்போது, கிறிஸ்து நமக்கு உதவமுடியாது என்பதால் அல்ல, மாறாக, கிறிஸ்து நமக்காக கொடுத்த ஆதாரமூலங்களை நாம் புறக்கணித்ததால்தான். நாம் உண்மையில் வேதாகமம் போதிப்பதை விசுவாசித்து, அந்த போதனைகளை உலகத்துக்கு அறிவிப்போமானால் நமக்குள்ளாக சமாதானத்தை உணர முடியும் - அது “எல்லாபுத்திக்கும் மேலான தேவ சமாதானமாயிருக்கிறது.”

நாம் நமக்குள்ளாக போர் செய்ய வேண்டியதில்லை என்பதே நல்ல செய்தியாக இருக்கிறது. நாம் கிறிஸ்தவர்களாய் நடந்து கொள்ளும் போது நமக்கு சமாதானம் உண்டு, தேவனிடத்தில் திரும்பினால் நம்முடைய எல்லா நம்பிக்கையையும் முற்றிலும் அவர் மீது வைக்கும்போது அது முடியும். நம்முடைய குறைகளை அவர் நிவர்த்தி செய்யமுடியும் மற்றும் நம்முடைய போராட்டங்கள் தீர்வு செய்யப்படமுடியும். பிரிவினை இல்லாத இருதயத்தில் உண்மையாகவே நமக்கு சமாதானம் உண்டாகும் - அது தேவனோடு மட்டுமல்ல, நம்முடனும் கூட. இவற்றில் பெரிதும் நமக்கு உபகாரியாயிருப்பது உள்ளான சமாதானத்திற்கு நமது குடும்பத்தினரே.

## மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே சமாதானம்

மேலும் தேவன் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே சமாதானம் தருகிறார். இந்த வழியாக, தேவன் குடும்பத்திலுள்ள நபர்களிடம் சமாதானம் அளிக்கிறார். அவர் எப்படி இதை செய்கிறார்?

### தடைகளை உடைத்தெரிவது

முதலாவது, தேவன் மக்களிடையே உள்ள அவர்களை பிரிக்கின்ற தடுப்புச்சுவர்களை தகர்த்தெரிந்து மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் சம ாதானத்தை அளிக்கின்றார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மேசியாவின் ராஜ்யம் என்பது சமாதானத்தின் இராஜ்யம் என்றும் அதில் “ஓநாய்களும் ஆட்டுக்குட்டியும் ஒன்றாக வாசம் செய்யும்'' என்றும் தீர்க்கதரிசனம் கூறியிருந்தனர் (ஏசாயா 11:6) - வேறு வார்த்தையில், முந்தைய பகைஞர்கள் நண்பர்களை கொண்டிருக்கும் இடமாக இருக்கும். இயேசு பலதரப்பட்ட மக்களை சபையில் ஒன்றாக சேர்த்து இணைத்த போது இந்த தீர்க்கதரிசனம் புதிய ஏற்பாட்டு காலத்தில் நிறைவேறிற்று; உதாரணமாக, யூதர் மற்றும் புறஜாதிகளிடையே. எபேசியர் 2:14, ன் படியே, … “அவரே நம்முடைய சமாதானகாரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தார்.'' ஆகையால், அவர்களுடைய முந்தைய

உறவுகள் அல்லது நிலைகள் எதுவாயிருப்பினும் எல்லாவிதமான மக்களும் சமாதானத்தையும் மற்றும் சகோதரத்துவத்தையும் சபையில் கண்டடைவார்கள். அதுபோல குடும்பத்தில், கிறிஸ்தவர்கள் பலதரப்பட்ட வாழ்க்கை முறைகளோடு வளர்ந்திருந்தாலும் அவர்கள் ஒருவரோடோருவர் சமாதானம் உள்ளவர்களாகி இருப்பார்கள், ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்கிறார்கள்.

**மக்களை சமாதானம் உள்ளவர்களாக்குவது**

இரண்டாவது, ஒவ்வொரு தனி நபரிடம் சமாதானத்தை உண்டாக்குவதின் மூலம் தேவன் மக்களிடையே சமாதானம் உண்டாக்குகிறார். மனித இனத்திற்கு போர் போல இயல்பானதொன்று இல்லை - வாதத்திற்கும் போரிடவும் எப்பொழுதும் தயார். இருப்பினும் நாம் நமது வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, நாம் மற்றவர்களிடம் போர் செய்கிற சிந்தனையைவிட்டு முடிந்த அளவு நமது அயலகத்தலாருடன் சமாதானமாக இருப்பதைத் தெரிந்து கொள்கிறோம். மற்றும் மாறாக, “சமாதானம் பண்ணுகிறவர்களை” இயேசு ஆசீர்வதித்தார் (மத்தேயு 5:9), மற்றும் பவுல் “கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்” என்று எழுதினார் (ரோமர் 12:18). மறைபொருளில், இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அன்றாட வாழ்க்கையைக் குறித்து சொல்லும்போது; “உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்” என்றார் (மத்தேயு 26:52). கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஞானவான்கள் ஏனென்றால் அவர்களுக்கு பரத்திலிருந்து ஞானம் வருகிறது, “பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும் இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயும் இருக்கிறது” (யாக்கோபு 3:17). அதன் காரணமாக, சட்டமாக, கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துப்போவார்கள் மற்றும் அயலகத்தாரிடமும் ஒத்துப்போவார்கள். ஏனென்றால், தேவனுடைய வல்லமையினால், அவர்கள் சமாதானம் பண்ணுகிற மக்கள்; “கிறிஸ்துவின் சமாதானம்” அவர்கள் இருதயத்தை ஆளுகிறது (கொலோசெயர் 3:15).

அதுபோல, குடும்பத்திலும், பரிசுத்த ஆவி உடையவர்கள் போர் செய்கிற குணமில்லாதவர்களாய் ஆனால் சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருப்பார்கள். அவர்கள் சண்டை பண்ணுவதற்கு இணங்க மாட்டார்கள்; அவர்கள் எப்பொழுதும் தீர்வுக்காணுவதையே நோக்கி செல்லுவார்கள். அவர்கள் நியாயமுள்ள மற்றும் நேர்மையான மற்றும் விவேகமுள்ளவர்களாவார்கள். அவர்கள் சமாதானம் பண்ணுகிற மக்கள். இதன் முடிவாக, குடும்பத்தில் சமாதானம் தங்கும்.

**கட்டமைப்பு கொடுத்தல்**

மூன்றாவதாக, தேவன் குடும்பத்தில் கட்டமைப்பைக் கொடுத்து சமாதானத்தை தருகிறார் மற்றும் குடும்பத்திலுள்ளவர்கள் அந்த கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். தேவன் மனித சமுதாயத்திற்கு அதன் அதிகாரத்திற்கு கீழ்ப்படிவதின் மூலம் சமாதானத்தை தருகிறார். அவர் புரட்சி செய்வதற்கு சம்மதம்

தெரிவிக்காமல், மாறாக கிறிஸ்தவர்கள் அரசாங்க அதிகாரத்திற்கு தங்களை கீழ்ப்படுத்த போதிக்கிறார் (ரோமர் 13:1-7; 1 பேதுரு 2:13-17). தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், ஆகையால், நம்முடைய சம்மதத்தோடு அரசாங்கத்திற்கு[3] கீழ்ப்படிந்து, நாம் ஒரு ஒழுங்கான சமாதானமான சமூகத்தை கொடுக்கிறோம்.

அதுபோல குடும்பத்திலுள்ள கிறிஸ்தவர்கள், தேவனுடைய கட்டளைகளை பின்பற்றுவதற்கு தெரிந்து கொண்டு, சமாதானமான குடும்பத்தை கொடுக்கிறோம். தேவனுடைய திட்டத்தில் குடும்பத்தில் புருஷன் மனைவியின் தலையாகவும் மற்றும் மனைவி புருஷனுடைய அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதும் ஆகும். பவுல் எழுதினதாவது,

> கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபேசியர் 5:23, 24).

மேலும், பிள்ளைகள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்றும் சொன்னார் (எபேசியர் 6:1-3).

புருஷனின் தலைமையில், அல்லது அதிகாரத்தில் என்பது நிச்சயமாக கொடுமையாக அல்லது கடுமையாக நடத்துவதல்ல. வேதவசனமும் அவர்களை மனைவியினிடத்தில் அன்பாயிருக்கவேண்டும் என்று அவசியப்படுகிறது. “அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து” (எபேசியர் 5:25, 27). ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்” என்று வாசிக்கிறோம். கிறிஸ்து சபையை அன்புகூர்ந்ததுபோல ஒரு புருஷன் தன் மனைவியினிடத்தில் அன்புகூரும்போது அவனுடைய அடிப்படை அக்கரை அவளுடைய நன்மை யைக்குறித்து இருக்கும்.

அப்படிப் போல, பெற்றோர்கள் தங்கள் அதிகாரத்தை பிள்ளைகளிடத்தில் செலுத்தும்போது அது கொடுமையாகவோ அல்லது கடுமையாகவோ செலுத்தக் கூடாது. வேதாகமம் இவ்வாறு கூறுகிறது: “பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாதிருங்கள்” (எபேசியர் 6:4). பிதாக்களுக்கு சொல்லும் போது “பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்று போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்” (கொலோசெயர் 3:21).

குடும்பத்திலுள்ள அதிகாரம் நிஜமாகும். புருஷனே குடும்பத்தின் தலைவர், மனைவி தன் புருஷனுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும், மற்றும் பிள்ளைகள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். மேலும் தேவன் கொடுத்த அதிகாரம், பொறுப்பு மற்றும் அன்புடன் சமநிலைப்படுத்தப்பட்டிருக்கிறது. யாரிடத்தில் அதிகாரம் உண்டோ அவர்கள் பொறுப்பு மற்றும் அன்போடு நடந்து கொள்ள வேண்டும், அவர்கள் வழி நடத்துகிறவர்களின் நன்மையை மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும். இந்த முறைகள் குடும்பத்தில் கடைப்பிடிக்கப்படும்போது - அதிகாரமுள்ளவர்கள் பொறுப்போடும் மற்றும் அன்போடும் நடத்தும்போது மற்றவர்கள் கீழ்ப்படிந்து நடக்கும் போது - குடும்பத்தில் சமாதானம் ஆதிக்கம் செலுத்தும்.

ஒரு இடத்தைக் கொண்டிருப்பதும், அந்த இடத்தை அறிந்திருப்பதும் பாதுகாப்பை அளிக்கிறது. அப்படியே, குடும்பத்தில், எல்லாருக்கும் ஒரு இடமும்

மற்றும் ஒவ்வொருவரும் தாங்கள் அன்புகூரப்படுவதை உணர்ந்தால், சமாதானம் சூழ்ந்து கொள்ளும். மனைவியுடைய பங்கு புருஷனுடையது போன்றது அல்ல, ஆனால் அதுவும் அவ்வளவு முக்கியமானதாகும். அவளுக்கு ஒரு இடம் உண்டு, அவளுடைய ஸ்தானத்திற்கு ஏற்றாற்போல; அவள் முக்கியமானவள், மற்றும் அவள் நேசிக்கப்படத்தக்கவள். பாதுகாப்பு மற்றும் சமாதானம் இப்படிப்பட்ட ஒழுங்கிலிருந்து வரவேண்டும். அதுபோல, பிள்ளைகளுக்கும் குடும்பத்தில் ஒரு ஸ்தானம் உண்டு. அவர்களுடைய பொறுப்பு பெற்றோர்களுடைய பொறுப்பு போன்றது அல்ல, ஆனால் அவர்களும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களே, அவர்களிடம் அன்புகூர வேண்டும், அவர்களிடம் அக்கரை செலுத்த வேண்டும், மற்றும் அந்த ஒழுங்கில் அவர்களும் பாதுகாப்பு மற்றும் சமாதானம் காணவேண்டும்.

மேலும், வேறுபாடுகள் எழும்பும்போது (சமயத்திற்கு சமயம் நடக்கும்), நமக்குள்ளாக இருக்கும் அந்த கட்டமைப்பு அவற்றிக்கு தீர்வு காணும். ஒரு வேளை புருஷன் மற்றும் மனைவியினிடத்தில் வேறுபாடு உண்டாகும். புருஷனே குடும்பத்தில் தலைவன். அவர் நினைப்பதை தானாகவே செயல்படுத்தலாமா? இல்லை, ஏனென்றால் அவன் தன் மனைவியினிடத்தில் அன்புகூருவதால். புருஷன் மனைவியினிடத்தில் அன்புகூருவதால் மனைவி தன் வழியே நடக்கலாமா? கூடாது, ஏனென்றால் அவளும் அவனிடத்தில் அன்புகூருவதால், அவள் புருஷனுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரும் தங்களை மற்றவர்களுக்கு வேலைக்காரராக எண்ணிக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்டதான அன்பின் காரணமாக, ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய வழிக்கு உதவுகிறார்கள். இப்படி, முடிவில், புருஷன் மனைவிக்கு எதிராக குடும்பத்தின் நன்மைக்காக ஆள வேண்டும், இவற்றை அவன் பிரியமின்மையோடு செய்கிறான். இந்த சந்தர்ப்பத்தில், அவள் தான் கவனிக்கப்படுகிறாள் என்றும் மற்றும் அவளுடைய இஷ்டங்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறது என்றும் உணர்கிறாள். அதுபோல, இவற்றை தெரிந்து கொள்ளுதலில் சமாதானம் உண்டு. தேவனால் அங்கிகரிக்கப்பட்ட இந்த திட்டத்திற்குள், யாரோ ஒருவர் அந்த பொறுப்புக்கு நியமிக்கப்பட்டு மற்றும் இறுதியான முடிவு எடுப்பதற்கு பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

தேவன் குடும்பத்தில் உள்ளவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துகிறார். அவர் மக்களிடம் உள்ள பிரிவினை என்னும் நடுச்சுவரை உடைப்பது மட்டும் அல்ல மற்றும் தனிநபரிடமும் சமாதானத்தை ஏற்படுத்துகிறார், ஆனால் அவர் குடும்பத்திற்காக ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துகிறார். அதின்படி நடக்கும்போது, அந்த திட்டத்தின் முடிவு சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகும்.

## முடிவுரை

போர் மற்றும் சச்சரவு நிறைந்த இந்த உலகத்தில், தேவன் சமாதானம் தருகிறார்: அவருடன் சமாதானம், நமக்குள் சமாதானம், மற்றும் மக்களுடன் சமாதானம், மற்றும் குடும்பத்திலுள்ள நபர்களிடமும் சமாதானம்.

மேலும், இந்த சமாதானத்தை நம்முடைய ஒத்துழைப்பு இல்லாமல் தேவன் தருவதில்லை. நாம் அவருடைய வழியை பின்பற்றுகிற போது, பின்பு அவர் சமாதானத்தை தருகிறார் - அதற்கு முன்பு அல்ல, மற்றும் நம்முடைய

*கீழ்ப்படிதல் இல்லாமல் அல்ல.*

*நாம் இரட்சிக்கப்பட்டிருப்பதற்கு இதுவே சாவி. தேவன் நம்முடன் சமாதானமாய் இருக்க விரும்புகிறார், ஆனால் நாம் அவரிடம் திரும்பி மற்றும் அவருடைய சட்டத்திற்கு கீழ்ப்படியும் வரை அவரால் அப்படி இருக்க முடியாது.*

---

குறிப்பிகள்

[1]*காண்க 1 கொரிந்தியர் 1:3; 2 கொரிந்தியர் 1:2; கலாத்தியர் 1:3; எபேசியர் 1:2; பிலிப்பியர் 1:2; கொலொசெயர் 1:2; 1 தெசலோனிக்கேயர் 1:1; 2 தெசலோனிக்கேயர் 1:2; 1 தீமோத்தேயு 1:2; 2 தீமோத்தேயு 1:2; தீத்து 1:4; பிலேமோன் 3.* [2]*ஒரு ஆண் அல்லது பெண்ணைக் குறிப்பிடுவதற்கு ''மனிதன்'' என்பது பொதுவாக இங்கு பயன்படுத்தப்படுகையில், சில சூழ்நிலைகளில் பின்வரும் துணைத்தலைப்புக்களைப் பயன்படுத்துதல் விரும்பித் தேர்ந்துகொள்ளப்படுவதாக இருக்கலாம்: "ஒரு நபருக்கும் தேவனுக்கும் இடையிலான சமாதானம்"; "ஒரு நபருக்குள்ளாக சமாதானம்" மற்றும் ''மக்களுக்கு இடையில் சமாதானம்.''* [3]*அரசாங்கம் தேவனுக்கு எதிராக செயல்படும் வகையில் சட்டங்கள் இயற்றினால் அவற்றிற்கு கிறிஸ்தவர் கீழ்ப்படியவேண்டிய அவசியம் இல்லை. "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" (நடபடிகள் 5:29).*